# ஜீ.முருகனின் அபத்தம், காமம், கனவுகள் நிரம்பிய கதைவெளி

ந. முருகேசபாண்டியன்

**மலர்:** 3
**இதழ்:** 4
**மாதம்:** ஏப்ரல்
**வருடம்:** 2019
ISSN: 2454-3993

கதைகளால் நிரம்பிய மனித இருப்பில், படைப்பாளி புனைவின் வழியாகச் சித்திரிக்க முயலும் கதைகள் எவற்றை முன்னிறுத்த முயலுகின்றன என்ற கேள்வி தோன்றுகிறது. நினைவுகளின் வழியாக ஒருபோதும் முடிவற்ற கதைகள், ஒவ்வொருவரின் இருப்பையும் அர்த்தப்படுத்துகின்றன. கொண்டாட்டம், வலி, குரூரம், பரவசம் எனக் கதைகள் உடல்களுக்குள் ஊடுருவி ஏற்படுத்துகிற உணர்வுகள், முக்கியமானவை. படைப்பாளியின் மனம் சலித்தெடுக்கிற அனுபவங்கள் எந்தவிகிதத்தில் பதிவாகிப் புதிய பிரதிகளை உருவாக்குகின்றன என்பதுதான் கதைகளின் ஆதாரம். கிராமம், நகரம் என்ற நிலவெளிக்கு அப்பால் மனிதர்கள் எப்படியெல்லாம் முடிவற்ற புதிர்கள் அல்லது துயரங்களுக்குள் சிக்கிக்கொண்டு தவிக்கின்றனர் என்று விவரிப்பது, ஜீ.முருகனின் கதையாடலில் மையம் என்று சொல்லவியலுமா? யோசிக்க வேண்டியுள்ளது. வழமையான யதார்த்தப் புனைகதைகளைச் சொல்வதுபோல பாசாங்கு செய்கிற கதைகளை எழுதியுள்ள முருகன், கதைகள்மூலம் வேறு ஒன்றை முன்வைத்திட முயலுகிறார். தீமை என்பது ஏன் இப்படி பெரும்பாலோனரின் வாழ்க்கையில் இயல்பாகப் பொதிந்திருக்கிறது என்று தான் கண்டறிந்திட்ட விஷயத்தைக் கதைகளின்மூலம் சித்திரித்திட முருகன் முயன்றுள்ளார். காலந்தோறும் இலக்கியப் படைப்புகள், மானுட வாழ்க்கையின் உன்னதம் குறித்துப் பேச்சுகளை உருவாக்கிட முயலுகின்றன. பூமிப்பந்தின் இயற்கை நிகழ்வான இருளைத் தீமையின் அடையாளமாக உருவகித்து, சமூக மனிதர்களின் விருப்புவெறுப்புகளை விமர்சிக்கிற இலக்கியம், எப்பொழுதும் நல்லவை குறித்து அக்கறைகொண்டிருக்கிறது. தர்க்கநெறிக்கு முரணாக மனிதமனம் எப்பொழுதும் வரன்முறையற்றுக் கட்டமைக்கிற புனைவுகள், ஒருநிலையில் தீமையாக வடிவெடுக்கின்றன. பொதுவாகத் தீமையானது, இதுவரை ஆழ்மனதில் உறைந்திருக்கிற அனைத்து நம்பிக்கைகளையும் சிதலமாக்குகிறது. ஒழுக்கம் X ஒழுக்கமின்மை என்ற முரணில் விரிந்திடும் வாழ்க்கைப் பரப்பில் இப்படியாக மனிதர்கள் தன்மூப்பாக அலைகிறார்கள் என்று முருகன் தனது கதைகளில் சொல்வது, தீமை மட்டும்தானா?

கட்டற்ற காம வேட்கையும், வரம்பில்லாத அதிகாரமும் மனிதனின் மையப்புள்ளியாக இயங்கிடும்வேளையில், ஒழுக்கத்தை முன்னிறுத்தும் படைப்புகள் கேள்விக்குள்ளாகின்றன. விளிம்புநிலையினரின் பொதுப்புத்திக்கு எதிரான செயல்பாடுகள், காமக்களியாட்டம், விதிமீறல்கள் போன்றன மனிதனின் இயற்கையான குணங்கள் என்ற புரிதலில், படைப்பாளியின் புனைவுகள் அத்துமீறுகின்றன. தீமையை எவ்விதமான ஒப்பனையுமின்றி வெளிப்படுத்தியிருப்பது, மனித ஆளுமையின் இன்னொரு முகமாகும். வைதிக புராண மரபு, தொல்பழங்குடி சார்ந்த தொன்ம மரபு, நாட்டார் மரபு ஆகிய மூன்று நிலைகளில் தீமையை எதிர்த்து வென்றிட முடியும் என்ற நம்பிக்கை, பரவலாக உள்ளது. தமிழில் பெரும்பாலான கதைசொல்லிகள், தீமையை வெல்வதற்கான ஆற்றலைக் கதைப்பிரதிக்குள் பொதிந்து வைத்திருக்கின்றனர். முருகன் எல்லாவிதமான நம்பிக்கைகளையும் தொலைத்துவிட்டுக் கையறுநிலையில் பாத்திரங்களின் போக்கில் கதையைச் சொல்லியிருக்கிறார். யதார்த்தமான கதைசொல்லலில் முருகன் புனைந்திருப்பது தீமையின் பிரமாண்டத்தையும், அதை எதிர்கொள்வதில் இருக்கிற பிரச்சினைகளையும்தான். பொதுவாக யதார்த்தக் கதைகளின் மையமான நம்பகத்தன்மை முருகனின் பெரும்பாலான கதைகளில் இல்லை. அவர் புனைந்திட விரும்பும் தொனியில் யதார்த்தத்தைக் கட்டமைத்திருப்பது முருகன் கதைசொல்லலில் தனித்துவம்.

நன்மை x தீமை என்ற எதிரிணைமூலம் புவியில் மனித இருப்புதான் என்ன என்ற கேள்வியின் வழியாக நவீன மனிதன் என்ற புதிய கருத்தியலை முருகன் உருவாக்கிட விழைந்துள்ளார். குறிப்பாகக் குடும்பம் என்ற நிறுவனத்தை முன்வைத்து மனைவி-கணவன் என மரபுரீதியில் புனையப்பட்டுள்ள மதிப்பீடுகளின் மேலாதிக்கத்திற்கு அப்பால் காதல் என்ற சொல் காற்றில் மிதக்கிறது. 'உருமாற்றம்' கதை, முன்வைத்துள்ள காதல் என்பது காமத்தின் நீட்சியாகியுள்ளது. உடல்களில் கொந்தளித்துக்கொண்டிருக்கிற பாலியல் வேட்கை என்பது மரபணுவில் பொதிந்திருக்கிறது. மறுஉற்பத்திமூலம் மனித இருத்தலைத் தொடர்ந்திடச் செய்கிற இயற்கையின் முன்னர் காமம் மட்டும்தான் முதன்மையானது. காதலும் மரபணுவில் இருக்கிறது என்றாலும், சமூக மனிதர்களால் அது புனைந்திட்ட முறை, காதலைப் புனிதப் பொருளாக்கி விட்டது. காமம் இழிவானது, காதல் உன்னதமானது என்ற பார்வைக் கோணத்தில் பொதிந்துள்ள நுண்ணரசியல் கவனத்திற்குரியது. கிராமத்தில் வசிக்கிற குடும்பம் பற்றி முருகனின் விவரிக்கிற கதையில், கதைசொல்லியின் மொழியானது தற்சார்பு இன்றி விரிந்துள்ளது. ஒழுக்கம் பற்றிய இறுக்கமான விதிகளைப் பொருட்படுத்தாமல், அக்காவும் தங்கையும் தன்னிச்சையாக வாழ்கிற சூழலும், அதற்கு ஒத்துழைப்பு அளிக்கிற அம்மாவும் அப்பாவும் என்ற குடும்பத்தை எப்படி புரிந்துகொள்வது? சரி,போகட்டும். சின்னவள் பள்ளி இறுதியாண்டில் படிக்கும்போது, அவளுடைய காதல் விளையாட்டுகள் தொடங்கிவிட்டன. அவளுக்கு ஏகப்பட்ட காதல் அனுபவங்கள். ஏதோவொரு ஆணின் பாலியல் தேவைக்காக உடலைப் பகிர்ந்துகொள்கிற காதலால் நிறைந்திருக்கிற மனம் அவளுக்கு வாய்த்திருந்தது. வீட்டில் மரணத்தை எதிர்நோக்கியிருக்கிற மனைவி அடுத்த அறையில் இருக்கும்போது, தங்கையை அழைத்துச்சென்று, புணர்ந்திட முயலுகிறவனுடைய செயலுக்கான அவளுடைய எதிர்வினையும், மனவெறுப்பும் முக்கியமானவை. எல்லாம் காதல் என்று கருதியவளின் மனதில் ஏற்பட்ட துக்கம் அளவற்றுப் பொங்குகிறது. காமம், காதல் என்ற சொற்களுக்கு அப்பால் விரிந்திடும் ஆண்-பெண் உறவின் அழுத்தம் ஒவ்வொருவரையும் ஏதோ ஒருநிலையில் தகவமைக்கிறது.

பெரிய எழுத்து விக்ரமாதித்யன் கதை போலத் தொன்மையான மரபில் சொல்லப்பட்டுள்ள ‘மாயக்கிளிகள்’ பறவையை முன்னிறுத்திய கதை என்றாலும், முருகன் விநோத உலகிற்குள் பயணிக்க முயலுகிறார். பின்காலனியக் காலச் சூழலில் யதார்த்தக் கதைகள் சிறந்தவை என்ற விவரிப்பின் பின்னர் பொதிந்திருக்கிற அரசியலை அறிந்திட்ட முருகன் மரபான கதைசொல்லல்மூலம்,

நவீனச் செவ்வியல் கதைப்பிரதியை உருவாக்கிட விழைந்துள்ளார். மருத நிலத்தில் அதிகாரம் செலுத்திய மன்னன், வனத்தில் தன்னிச்சையாகத் திரிந்த குறிஞ்சி நிலப் பெண்ணைத் திருமணம் செய்து அவளை ராணியாக்கிவிட்டான் என்று தொடங்குகிறது கதை. எத்தகைய கட்டுக்காவல் வலுவாக இருந்தாலும், மாபெரும் அதிகாரம் மேலோங்கியிருந்தாலும் சுயேச்சையான பெண்ணின் பாலியல் வேட்கையைக் கட்டுப்படுத்திட முயலுவது அபத்தமானது. மந்திரத்தின் மூலம் எதையும் செய்திடும் ஆற்றல்மிக்க பெண்ணின் சாகசங்களுக்கு முன்னர், அதிகாரம் நொறுங்குகிறது. பெண்ணின் காமம், காலங்காலமாக ஆண்கள் உருவாக்கியுள்ள விதிகளைப் புறந்தள்ளிவிட்டு, இயற்கையான முறையில் தனக்கான வழியை உருவாக்கிடும் என்பதற்கு ஆதாரமாக மாயக்கிளிகள் வெளியெங்கும் சிறகடிக்கின்றன. பெண்ணின் தன்னிச்சையான பாலியல் துய்ப்பில், இதுவரை சமூகம் கட்டமைத்திருக்கிற அன்பு, தாய்மை, காதல், நேர்மை போன்றவை தகர்ந்து போகின்றன.

'ஜோசப்பின் மரணம்', கதை, முருகன் எழுதியுள்ள சிறந்த சிறுகதைகளில் ஒன்று என யாராலும் சொல்லிட முடியும். இருவேறு மனநிலைகளில் இயங்குகிற உடல்களில் கொந்தளித்துக்கொண்டிருக்கிற வனமமும் குரோதமும் எப்படியெல்லாம் செயல்படும் என்பதற்கு சாட்சியாகக் கதைசொல்லியின் மொழி இருக்கிறது. எவ்விதமான நியதியோ, அறமோ இல்லாமல் உடலினால் மட்டும் வாழ்கிறவன் செய்த கொலை என்பது ஒருவகையில் அபத்தம். மதுக்கூடத்தில் எதிரெதிர் அமர்ந்து வெறுப்பின் கனிகளை விழுங்கி, எதிராளியின் ஆண் குறியானது ஒப்பீட்டளவில் தன்னுடையதைவிட சிறியது என்று சந்தோசப்படுவதுடன், ரோஸ்மேரியைத் தேடிப் புணர்ந்த சாகசமும் என வாழ்கிற கதைசொல்லியின் எதிராளிமீதான வன்முறை மனநிலை அழுத்தமானது. ஜோசப் தன்னைக் கொன்று விடுவான் என்று வீண் மனப்பிரேமையில் தானாக உருவாக்கிக்கொள்கிற கற்பிதம், கதையின் மையத்தில் தனித்துவமானது. ஜோசப் செத்துட்டான் எனத் தொடங்கிடும் கதையின் முதல் வரியில் இன்னொரு ஜோசப்பும் சாகப் போகிறான் என்பது புலனாகிறது. வன்முறையின் மறுபக்கம் அச்சத்தினால் தோய்ந்திருப்பதன் வெளிப்பாடுதான் ஜோசப் கொல்லப்பட்டது என்றும் கதையை வாசிக்கலாம். சகமனிதன்மீது வெறுப்புடன் அவனைக் கொல்வதற்கான காரணங்களைத் தேடியலைவதன் பின்புலம், ஒருவகையில் நவீன மனிதனின் குருதிக்குள் இன்றும் பாய்ந்துகொண்டிருக்கிற ஆதி விலங்கின் ஏராா

அன்றாட வாழ்வில் கசப்புப் பொங்கிடும் சுழலில் வாழ்கிறவர்கள் எதிர்கொள்கிற வலிகளும், வதைகளும் அளவற்றுப் பொங்குகின்றன. நனவில் ஆழமான பிரக்ஞையுடன் எல்லாம் துல்லியமாக இருப்பதான பிரேமையுடன் வாழ்தலின் மறுபக்கம் கனவில் அல்லது போதமற்ற மனதில் இருண்மையும் அபத்தமும் உறைந்திருக்கின்றன. தற்கொலை செய்துகொண்ட கணவன், ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுக் காணாமல்போன மகன் என இருவரையும் இழந்து தவிக்கும் நடுத்தர வயதான பெண்ணின் துயரத்தின் வழியாக அவளுடைய மனம் கட்டமைத்திடும் புனைவு, அபத்த நாடகத்தின் உச்சம். இழப்பு ஏற்படுத்துகிற முடிவற்ற வலியின் வேதனையுடன், ஒவ்வொரு நாளையும் கடத்துகிற பெண்ணின் மனம் புனைகிற காட்சியில் உயிர்த்தெழும் மகன், கணவன் பற்றிய சித்திரிப்புகள், நேர்த்தியான கதையாகியுள்ளன. 'ஆற்றோடு போனவன்' கதையில் முருகன் புனைந்திடும் புனைவு, ஒரு புள்ளியில் இருந்து விரிந்திடும் மனதில் புனைந்திருக்கிற அபூர்வமான தருணம் அல்லது காட்சி என்று சொல்லமுடியுமா? துயில் கதையில் மனைவியுடன் முரண்பட்டு, தனது பூர்விக வீடு, நிலத்திற்கு நள்ளிரவில் செல்கிறவன், பாழடைந்த வீட்டில் தந்தையைப் பார்க்கிறான். 'குடும்பம், பொண்டாட்டி, புள்ளிங்க நெனப்பு இல்லாம, உங்கப்பன மாதிரியே நீயும் குடிச்சி கூத்தடிச்சிக்கிட்டுத் திரிஞ்சா யாரு கொஞ்சுவா' என்ற மனைவியின் வசவு சொற்கள் விரட்டிட மீண்டும் குடித்து, போதையுடன் கிளம்பியவன், தந்தையைப் பார்த்துப் பேசுவதாக நம்புகிறான். அது

ஒருவேளை கனவாக இருக்கலாம். முருகனின் கதைகளில் கனவுகள் முக்கிய இடம் வகிக்கின்றன. பெரும்பாலும் ஆண்கள்தான் கனவின் வழியாக வேறு உலகின் பயணிக்கின்றனர். மனைவியுடன் முரண்பாடு, குடி, தான்தோன்றி வாழ்க்கை, பொறுப்பற்ற தன்மையில் தங்கள் மனவிருப்பத்திற்கேற்ப அலைந்திட விரும்புகிற ஆண்கள் கனவின்மூலம் எப்போதும் வேறு உலகிற்குள் பயணிக்கின்றனர். இந்தப் போக்கின் நீட்சியாகச் சுயேச்சையான மனநிலையில் பெண்கள் தங்கள் விருப்பத்தின் அடிப்படையில் குடும்பத்திற்கு வெளியிலான பாலியல் உறவில் திளைப்பதையும் கதைகள் சித்தரிப்பதைப் புரிந்துகொள்ள முடியும். மலரினும் மெல்லிது காமம் என்றும் காதல் என்பது மனிதகுலத்துக்குக் கிடைத்த பேறு என்றும் காலங்காலமாக இலக்கியப் பிரதிகள் கட்டமைத்திருக்கிற பாலியல் உறவு குறித்து எதிர்நிலையில் முருகன் விவரித்திருக்கிற கதைகள், பொதுநிலையில் புனைவு என்பதைமீறி, பெண்கள்மீது குற்றத்தைச் சுமத்துகின்றன் குற்றமனத்தை ஆணுக்கானதாக முன்னிலைப்படுத்துகின்றன. 'கிழத்தி' கதையில் பாலியல்ரீதியில் கேவலமாகச் சித்திரிக்கப்படும் பெண்ணும், 'இடம்' கதையில் இன்னொருவன் மனைவியுடன் பாலியல் உறவு கொள்கிறவனின் அற்ப மனநிலையும் செயல்பாடும் பொதுநிலையில் ஆண்களின் வக்கிரத்தையும், அபத்தமான இருப்பையும் பதிவாக்கியுள்ளன. முருகன் சித்திரிக்கிற பெண்கள் குறித்த கதைகளைப் பெண் நோக்கில் எழுதியிருந்தால் வேறுவகைப்பட்ட பிரதியாக இருந்திருக்கும்.

'அதிர்ஷ்டமற்ற பயணி' கதையில் கதைசொல்லியான ஜி.முருகனும் கதைக்குள் இடம்பெறும் பயணியும் என்ற புனைவு, சுவராசியமான மொழியில் விரிந்துள்ளது. கதாபாத்திரமும் கதைசொல்லியும் முரண்பட்டுப் பேசுகிற பேச்சுகள், எது நிஜம்? எது புனைவு? என்ற வரையறைமீறி புதிய தளத்திற்குள் பயணித்துள்ளன. எழுத்தாளன் மரணம் என்ற கருத்தியல் ஆதிக்கமடைந்திருக்கிற பின்நவீனத்துவக் காலகட்டத்தில், கதைக்குள் உருவாக்கப்பட்டுள்ள கதைமாந்தருக்கும் கதாசிரியருக்கும் இடையிலான தொப்பூள் கொடி உறவு வெறுமனே அபத்தமானது. அதிகாரத்தின் உரையாடலில் ஒவ்வொருவரின் பிம்பமும் தன்மையும் வரையறுக்கப்படுகின்றன. சமூகம் அல்லது சூழலால் கட்டமைக்கப்பட்ட நம்மைப் பற்றிய புனைவுகள்மூலம் சுயம் உருவாக்கப்படுகிறது. ஒருநிலையில் நம்மைப் பற்றிய புனைவை நம்புவதோடு, அசல் தன்மையை மறுதலிப்பது நிகழ்கிறது. இந்நிலையில் ரொலான் பார்த் சொல்வதுபோல நாம் கதாசிரியனாகவும் கதைமாந்தராகவும் இருக்க நேரிடுகிறது. உண்மை புனைவாகவும் புனைவு உண்மையாகவும் இருக்கிற நிலையில், ஒரு மனிதனுக்குள் இருக்கிற துண்டாடப்பட்ட பல குரல்கள், பல 'நான்'களின் மையமாகும். "உங்கள் உதாசீனம் உண்மையாகவே என்னை வருந்தச்செய்கிறது. ஒரு மனிதனின் எதார்த்த இருத்தலைப் பற்றியோ அவனுடைய துயரமிகு மனோபாவத்தைப் பற்றியோ நீங்கள் அக்கறைகொள்வதேயில்லை. உங்களுக்கு வேண்டியதெல்லாம் ஒரு கதை' என்ற கதைமாந்தரான பயணியின் குரலுக்கு ஜீ.முருகன், எழுத்தாளனுக்கு 'வேண்டியதெல்லாம்' காகிதம், உணவு, சிகரெட், கொஞ்சம் விஸ்கி..' என்று பதிலளிக்கிறார்.

திருமணமான நடுத்தர வயது ஆண் வேலைக்காக அனுப்புகிற விண்ணப்பம் விவரித்துள்ள அனுபவங்கள் வெறுமனே கதை மட்டுமல்ல. 'ஒரு வேலைக்கான விண்ணப்பம்' என்ற கதையின் தலைப்பு, சுயபகடியான மொழியில் நடப்புச் சூழலைப் பதிவாக்கியுள்ளது. வளமான பொருளியல் வாழ்க்கைக்கான முயற்சியில், க.சொக்கலிங்கம் (வயது 38) எழுதியுள்ள விவரணைகள் யாருக்கு வேண்டுமானாலும் நிகழ்வதற்கான சாத்தியம் இருக்கிறது. இயந்திரவியல் பட்டயப் பட்டதாரியின் வாழ்க்கையில் அடுத்தடுத்து நடைபெற்ற சம்பவங்கள் குறித்த விவரிப்பின் வழியாக வெளிப்படுகிற துயரம், ஒருநிலையில் மானுடத்தின் துயரமாகிறது. ஏற்றஇறக்கத்துடான வாழ்க்கை, சூதாட்டமாக மாறுவதை எப்படி எதிர்கொள்வது என்ற கேள்வியை முருகன் முன்வைத்துள்ளார். வழமையான தந்திரம், கபடம், பெண்ணுடல் கொண்டாட்டம், குடி, சூது, நட்பு, அன்பு, குடும்பம் என்ற பாட்டையில்

பயணிக்கிற சொக்கலிங்கம் திடீரென வாசகனாகவும் இருப்பதுதான் கதையின் உச்சம். வறண்ட அறிக்கைபோல சொல்லப்பட்டிருக்கிற கதையாடல், வாசிப்பின் வழியாக உருவாக்கிடும் புதிய கதைகள் முக்கியமானவை.

நவீன வாழ்க்கையின் நெருக்கடியைத் தாக்குப் பிடிக்கவியலாமல், வீட்டைப் பிரிந்து எங்கோ ஒரு நகரத்தில் மட்டமான விடுதியில் தங்கியிருக்கிறவனின் மனச்சோர்வு எந்த நேரத்திலும் தற்கொலையைத் தேர்ந்திட விழைகிறது. லாட்ஜின் மாடியில் சிறுவர்களால் துரத்தப்படும் 'பூனை ஏன் தற்கொலை செய்துகொள்ள வேண்டும்? என்ற கேள்வியானது உருவகநிலையில் புனையப்பட்டுள்ளது. பூமியில் உயிர் வாழ்வதற்கான தகுதியை இழந்திட்டதாகக் கருதுகிறவன், மனிதனாகப் பிறந்துவிட்டதனால் ஏற்படுகிற குற்ற உனர்வினால் அலைக்கழிக்கப்படுகிறான். இரவினில் தூங்கிட இயலாமல் கனவுகளில் உயிர்த்திருப்பது, அவனுடைய இருப்பை அபத்தமாக்குகிறது. அவனுடைய கணினி மையத்தில் இருக்கையில், ஒருவன் நம்பிக்கை துரோகி என்று அவனை இழுத்துச்சென்று கழுத்தைத் துண்டிக்கிறான். அந்தக் கூட்டத்தில் இரக்கமற்ற பாவத்தில் அவனுடைய மனைவியும் நிற்கிறாள். எல்லோரும் கைவிட்ட நிலையில், மரணத்தை ருசிக்க அவனுடைய உடல் தள்ளாடுகிறது. அந்த நேரத்தில் உடலில் காமம் கசிகிறது. மரணத்திற்கும் காமத்திற்கும் ஏதோ ஒருவகையில் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. பணத்துக்காக வந்தவள், பித்துப் பிடித்த நிலையில் அவன் முயங்குவதைத் தாங்கிடாமல் தவிக்கிறாள். 'எங்க அப்படியே செத்துப் போயிடுவீங்களோன்னு பயந்தேன்' என்ற அவளின் பேச்சு, ஏன் இப்படி மனிதர்கள் கைவிடப்பட்ட நிலையில் துயரத்தில் தத்தளிக்கின்றனர்? தற்கொலையை நோக்கித் தள்ளுகிற சூழலின் வெக்கை உருவானது எப்படி? என்று கேள்விகளை எழுப்புகிறது. 'வார்த்தை' கதையும் மனைவியின் செயல்பாட்டில் தத்தளிக்கிற ஆண் படுகிற அவலத்தைச் சொல்கிறது. இரவினில் நிரம்பக் குடித்துவிட்டு, போதையில் வீட்டுக்கு வந்தவன், வீட்டில் தூங்கியெழுந்தபோது, அவனுடைய மனைவியான சித்ரா,' நீ என்ன யாருன்னு நெனச்சி அந்த வார்த்தையச் சொன்ன?' என்ற கேள்வி ஏற்படுத்துகிற பதற்றம், பெருகிறது. அவளிடம் என்ன சொன்னோம் என்ற நினைவு இல்லாமல், மனைவியிடம் கெஞ்சுகிறவன் நிலையில் சொல்லப்பட்டுள்ள கதையில், திடீரெனக் கனவுபோல நிகழ்கிற சம்பவங்கள் நடந்ததுபோலவே விவரிக்கப்பட்டிருக்கின்றன. காலம் கரைந்துபோன நிலையில் அவனுடைய முந்தைய நாள் போதையின் தொடர்ச்சி என்று கதையை நகர்த்தலாம். எது எப்படியோ அந்த வார்த்தை ஏற்படுத்திய கசப்பான மனம், மின்விசிறியில் இருந்து முடிச்சிட்டுத் தொங்கிய புடவையாக மாறிவிட்டதா? குடும்ப நிறுவனத்தில் ஆணும் பெண்ணும் இயைந்து வாழமுடியாமலும் பிரிந்திட முடியாமலும் துயரத்தில் வாடி, வேதனைக்குள்ளாகியிருப்பதை ஆண் மொழியில் சொல்லப்பட்டிருக்கிற கதைகளைப் பெண் மொழியில் சொல்லியிருந்தால் நிச்சயம் நியாயங்கள் முழுக்க மாறியிருந்திருக்கும். குடும்பத்திற்குள் மாட்டிக்கொண்டு தவிக்கிற பெண், சூழலின் நெருக்கடி, கணவனின் அடாவடித்தனம் காரணமாகத் தனது இருப்பைத் தக்க வைத்துக்கொள்ள செய்கிற செயல்கள், ஒருநிலையில் சித்ரவதையாக மாறுகின்றன. குடும்ப அமைப்பு பல்லாண்டுகளாக உருவாக்கியிருக்கிற மதிப்பீடுகளை சிதலமாக்குவதில் ஆண், பெண் என்று பெரிய பேதம் இல்லாத நிலையில், முருகன் விவரித்துள்ள பெண்கள் ஒருவகையில் ராட்சசிகள். ராட்சதர்கள் இல்லாமல் ட்சசிக்

'கைவிடப்பட்ட கதை'யில் சொல்லப்படுகிற சம்பவங்கள் வெவ்வேறு பார்வைக் கோணத்தில் ஒரே புனைவைக் கட்டமைக்க முயலுகின்றன. நாயர் மெஸ் நடத்துகிற மலையாளி, அவர் தற்செயலாகச் சந்திக்கிற கரகாட்டக்காரியான அன்னம்மா, அவளுடைய தங்கை செல்வி, ராஜா சார், கதைசொல்லி, ராமசாமி எனப் பலரும் கதைக்குள் பயணிக்கின்றனர். முருகனின் விவரிப்பில் இருந்து கதையானது ஜெயலலிதாவின் மர்ம மரணம், சசிகலா பற்றிக் கதைப்பதற்குத் தோது இருப்பதாகச் சந்தேகம்

தோன்றினாலும், கதை என்னவோ அசலான அன்னம்மாவையும் நாயர் மெஸ்ஸையும் பற்றியதுதான். சராசரியான நிகழ்வுகளால் சொல்லப்பட்டிருக்கிற கதையாடல், முருகனின் விவரிப்பில் வேறு ஒன்றாக மாறுகிறது. அன்னம்மாவின் காவியம் போலச் சொல்லப்பட்டிருக்கிற கதைப்போக்குதான், கதையை நம்புவதா அல்லது நம்பாமல் இருப்பதா என்ற கேள்விகளை எழுப்புகிறது.

நுகர்பொருள் பண்பாட்டில் சிக்கியுள்ள நவீன வாழ்க்கைப் பரப்பில், நெருக்கடியையும் வதைகளையும் எதிர்கொண்டிருக்கிற மனிதர்கள் குறித்து முருகன் புனைந்திருக்கிற பகடியில் கருப்பு நகைச்சுவை உணர்வு பொதிந்திருக்கிறது. மனிதனின் அகத்தில் அடங்கியொடுங்கி நினைவிலி நினையில் பொதிந்திருக்கிற அச்சமானது, நரம்புகளை அதிரச்செய்யும் நகையுணர்வாக மாற்றீடு செய்யப்பட்டு வெளிப்படுவது கருப்பு நகைச்சுவையின் ஆதாரமாகும். அன்றாட வாழ்க்கையில் சராசரி மனிதன் எதிர்கொள்கிற வன்முறை, அதிகாரம், அருவறுப்பு போன்றவற்றைப் புனைவு மொழியில் மெல்லிய நகைச்சுவையுடன் முருகனின் சில கதைகள் பதிவாக்கியுள்ளன. "கரடிகளின் பாடல்', 'அற்புதம்' போன்ற கதைகள், நடப்புச் சூழலைப் படிக்குள்ளாக்கியுள்ளன. கரடியைவிட அவை பாடும் பாடல்கள்தான் பெரிய அச்சுறுத்தல் எனக் கதைக்கிற முருகன் கரடிகளை முன்வைத்துச் சொல்கிற விஷயங்கள், கேலியான தொனியில் விரிந்துள்ளன. பாடல் என்பதைக் கவிதை என மாற்றி வாசித்தால், தமிழிலக்கியச் சூழலில் கரடிகள் செய்கிற சேட்டைகள் புலனாகின்றன. கவிதை எப்படியெல்லாம் கவிஞர்களை ஆட்டிப் படைக்கின்றன என்ற கதையாடல் வெறுமனே பகடிக்கானது மட்டுமல்ல. இன்னும் யோசிக்க வேண்டும்.

'அற்புதங்கள்' கதையைச் சொல்கிற கதைசொல்லி, எந்த இடத்திலும் யாரையும் தாக்கிடாமல், பூனையைப்போல மெல்லிய குரலில் எழுத்தாளர் கௌரவன் வீட்டுக்குச் சென்ற அனுபவங்களைப் பதிவாக்கியிருக்கிறார். ஒருவிதமான தாழ்வு மனப்பான்மையுடன் சென்ற கதைசொல்லி, அங்கே இலக்கியத்தின் பெயரால் நடந்த சம்பவங்களைக் கண்டு, பூனையும் தானும் அற்புதம் எதுவும் நிகழ்த்தவில்லை என்று நினைத்துக்கொள்வது, பகடியின் உச்சம். பெரும்பாலான கதைகளில் மனித வாழ்க்கையின் சிடுக்குகளையும் மனதின் அவலங்களையும் துயரமான இருப்பினையும் சித்திரித்துள்ள முருகன், அற்புதங்கள் கதையாடலில் வெளிப்படுத்தியிருப்பது கருப்பு நகைச்சுவைதான்.

சிம்மாசனம், இளவரசி மற்றும் மரணம், ரகசியப் பெயர், மந்திர வாள் போன்ற கதைகள் மாந்திரிக யதார்த்தக் கதை வகையிலானவை. மரபுக் கதைகள், தொன்மக் கதைகள் பின்புலத்திலும் முருகன் கதைகள் எழுதியுள்ளார். பாரிச வாயு, குளோப், மாயக்கிளிகள், நாய், மஞ்சள் பாம்புகள், குரங்குகளின் வருகை, காண்டா மிருகம், சாம்பல் நிறத் தேவதை, புத்தரின் தொப்பி, இவ்வாறாகக் கானகம் கலையத் தொடங்கியது என்றார்கள் போன்ற கதைகள் பிற உயிரினங்கள் பூமியில் பெறுகிற இடத்தையும், மனிதர்கள் சகஉயிரினங்களை எப்படி நடத்துகின்றனர் என்பதை நுட்பமாகச் பதிவாக்கியுள்ளன. 'குளோப்' கதையில் நாராயணன், ஸ்டீபன் என்ற பூனை ஆகிய இருவருடன் ஆறுமுகம் என்ற எலிக்கு ஏற்பட்ட உறவு, எலியின் பார்வையில் சொல்லப்பட்டுள்ளது. காதல் விவகாரத்தில் காதலியால் கைவிடப்பட்ட நாராயணன் அடைகிற மனவேதனையும், காய்ச்சலும் எனத் தவித்தவர், இறுதியில் தற்கொலையில் தனது முடிவைத் தேடிக்கொண்டாரா? உடலில் தோன்றும் அல்லது மரபணுவின் தூண்டுதலால் வெளிப்படுகிற எதிர்பாலினத்தின் மீதான பாலியல் வேட்கைக்காக ஓர் உயிர் தற்கொலை செய்துகொள்வது மனித இனத்தில்தான் நிகழ்கிறது என்று ஆறுமுகம் என்ற எலி கதை சொல்கிறதா?

ஜீ.முருகன் எழுதியுள்ள கதைகளை அவ்வப்போது வாசிக்கையில், வித்தியாசமான மொழியில் சொல்லப்பட்டிருக்கின்றன என் நினைத்துக்கொள்வேன். அண்மையில் அவருடைய 63 கதைகளையும்

ஒட்டுமொத்தமாக வாசித்தபோது, சமகால வாழ்க்கை குறித்து உக்கிரத்துடன் சொல்லப்பட்டிருக்கிற கதையாடல்கள், தொந்தரவு செய்தன. ஏன் இப்படி மனிதர்கள் அற்பத்தனம், வன்முறை, குரோதம், வெறுப்பு, பாலியல் அத்துமீறல் எனத் தங்களுடைய இயல்பான வாழ்க்கையை நாசமாக்கிக்கொள்கிறார்கள் என்று தோன்றியது. குடும்ப அமைப்பு சிதைவடைந்து, எல்லோரும் ஆளுக்கொரு ஸ்மார்ட்போன்மூலம் வெற்றுக் கேளிக்கைக்குள் மூழ்கி, ஒற்றையாகத் தவிக்கிற சூழலில், முருகன் எழுதியுள்ள கதைகள் சமகால வாழ்க்கை குறித்து விசாரணையைத் தொடங்கிடும் வல்லமையுடையன. அதுவே ஜீ.முருகன் கதைகளின் பலம்.

**உசாத்துணை நூல்**

1. ஜீ.முருகன் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகள், முருகேசபாண்டியன், ந (தொ-ஆ), டிஸ்கவரி புக் பேலஸ், சென்னை, 2018.